**ஏப்ரல் – 13**

# TNPSC துளிகள்

- தமிழ்நாடு அரசானது 2025-2026 ஆம் ஆண்டு முதல் 6 முதல் 9 ஆம் வகுப்புகளுக்கு செயற்கை நுண்ணறிவு மற்றும் நிரலாக்கம் குறித்த ஒரு அடிப்படைக் கல்வியினை அறிமுகப் படுத்த உள்ள நிலையில் தமிழ்நாட்டினை இந்தியாவில் முதல் மாநிலமாக இது மாற்ற உள்ளது.
- நிபா வைரசின் சுய-பெருக்க தூது ரிபோநியூக்ளிக் அமிலம் (saRNA) வகை தடுப்பூசியை உருவாக்கச் செய்வதற்காக வேண்டி ஒரு கூட்டு முன்னெடுப்பினை ஜெனோவா பயோ ஃபார்மாசூட்டிகல்ஸ் நிறுவனம் அறிவித்துள்ளது.
- கூகுள் நிறுவனமானது, செயற்கை நுண்ணறிவு செயலிகளின் செயல்திறனை நன்கு விரைவுபடுத்துவதற்காக வடிவமைக்கப்பட்டுள்ள அயர்ன்வுட் எனப்படுகின்ற அதன் ஏழாவது தலைமுறை நுட்பத்திலானச் செயற்கை நுண்ணறிவுச் சில்லினை அறிமுகப் படுத்தி யுள்ளது.
- அகமதாபாத்தின் இந்திய மேலாண்மைக் கல்வி நிறுவனம் (IIM) ஆனது ஐக்கிய அரபு அமீரகத்தில் (UAE) உள்ள துபாயில் அதன் முதல் அயல்நாட்டு வளாகத்தினை நிறுவ உள்ளது.
- துபாயின் பட்டத்து இளவரசரும், துணைப் பிரதமரும், ஐக்கிய அரபு அமீரகத்தின் பாதுகாப்பு அமைச்சருமான ஷேக் ஹம்தான் பின் முகமது பின் ரஷீத் அல் மக்தூம் இந்தியாவிற்கான தனது முதல் அதிகாரப்பூர்வப் பயணத்தினை மிகச் சமீபத்தில் மேற் கொண்டார்.

# தமிழ்நாட்டுச் செய்திகள்

## விருதுநகர் சம்பா மிளகாய் வத்தல்




- தமிழ்நாட்டின் விருதுநகர் சம்பா மிளகாய் வத்தல் (மிளகாய்) புவிசார் குறியீட்டினைப்

பெற்றுள்ளது.

- விருதுநகர் மாவட்டத்தில் வளர்க்கப்படுகின்ற இவ்வகை மிளகாய் ஆனது அதன் மிகத் தனித்துவமான சுவை, மிதமான காரம் மற்றும் அடர்ந்த சிவப்பு நிறத்திற்குப் பெயர் பெற்றது.
- சம்பா மிளகாய் ஆனது விருதுநகர், சாத்தூர், தூத்துக்குடி மற்றும் இராமநாதபுரம் ஆகிய இடங்களில் முக்கியச் சந்தைகளுடன் விருதுநகர், இராமநாதபுரம், சிவகங்கை மற்றும் தூத்துக்குடி மாவட்டங்களில் பயிரிடப்படுகிறது.
- 1972 ஆம் ஆண்டில் தமிழ்நாடு அரசால் வெளியிடப்பட்ட இந்திய அரசிதழில், சாத்தூர், இராஜபாளையம், விருதுநகர் பகுதிகளில் மேற்கொள்ளப்படும் இந்தச் சாத்தூர் சம்பா மிளகாய் சாகுபடி சிறப்பிக்கப்பட்டுள்ளது.
- சாத்தூர் சம்பா (சன்னம்/மெல்லியது) என்று பிரபலமாக அறியப்படும் இந்த மிளகாய் வகை ஆனது தூத்துக்குடி வழியாக இலங்கைக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது.

## 2024-25 ஆம் ஆண்டில் உணவு தானிய உற்பத்தி





| Crop | Area coverage 2023-2024 | 2024-25* | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | Target (L. Ha) | Area coverage (L. Ha) | Increase/ decrease over last year (ha) | % of increase/ decrease over last year | Achievement against target (in %) |
| Paddy | 20.936 | 20.2 | 21.317 | 38,154 | 1.8 | 105.5 |
| Millets | 9.554 | 9.95 | 9.777 | 22,312 | 2.3 | 98.3 |
| Pulses | 7.491 | 10 | 7.517 | 2,646 | 0.3 | 75.2 |
| Total | 37.981 | 40.15 | 38.611 | 63,112 | 1.67 | 96.3 |

L. Ha - Lakh Hectares | *As on March 31, 2025

- முடிவடைந்த 2024-25 ஆம் நிதியாண்டில், தமிழ்நாடு மாநிலத்தில் முந்தைய ஆண்டை விட சற்று அதிக உணவு தானியச் சாகுபடி பதிவாகியுள்ளது.
- 2023-24 ஆம் ஆண்டில் 37.98 லட்சம் ஹெக்டேராக இருந்த சாகுபடிப் பரப்பானது, 2024-25 ஆம் ஆண்டில் சுமார் 38.6 லட்சம் ஹெக்டேர் ஆகப் பதிவானது என்பதோடு இது 40.15 லட்சம் ஹெக்டேர் என்ற இலக்கை விட சுமார் 1.5 லட்சம் ஹெக்டேர் குறைவாகும்.
- 2024 ஆம் ஆண்டு நவம்பர்-டிசம்பர் ஆகிய இரு மாதங்களில் ஏற்பட்ட ஃபெங்கல் புயல் மற்றும் 2025 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் பதிவான பருவகாலம் சாரா கனமழை போன்ற நிகழ்வுகளால் 9.1 லட்சம் ஏக்கர் அல்லது 3.68 லட்சம் ஹெக்டேர் பரப்பிலான பயிர்ச் சேதம் பதிவானது.

- இதன் விளைவாக, அரசாங்கம் ஆனது, மாநிலப் பேரிடர் மீட்பு நிதியின் (SDRF) கீழ் 6.16 லட்சம் விவசாயிகளுக்கு இடுபொருள் மானியமாக சுமார் 546 கோடி ரூபாய்களை வழங்கியது.
- 2025-26 ஆம் ஆண்டிற்கு, அரசாங்கம் மொத்தம் 40.3 லட்சம் ஹெக்டேர் நிலங்களை உணவு தானிய உற்பத்திக்கான இலக்காக நிர்ணயித்துள்ளது என்பதோடு இதில் நெல் சாகுபடியின் பங்கு 20.3 லட்சம் ஹெக்டேர்; மற்றும் சிறு தானியங்கள் மற்றும் பருப்பு வகைகள் சாகுபடியின் பங்கு தலா 10 லட்சம் ஹெக்டேர் ஆகும்.

## விழுப்புரத்தில் உள்ள மியோசீன் காலப் பள்ளத்தாக்கு




Published with permission from the International Commission on Stratigraphy (ICS). International chronostratigraphic units, ranks, names, and formal status are approved by the ICS and ratified by the International Union of Geological Sciences (IUGS).


Source: 2023 International Chronostratigraphic Chart produced by the ICS.

- பொம்மையபாளையம் பள்ளத்தாக்கு ஆனது ஆரோவில் உயிரியல் பகுதியைச் சுற்றி உள்ள பள்ளத்தாக்குகளின் ஒரு பகுதியாகும்.
- பல நூற்றாண்டுகளாக சில மழை நீரோட்டங்களால் மேல் மட்ட மண் மற்றும் பாறைத் துண்டுகள் வங்காள விரிகுடாவிற்கு அரித்துச் செல்லப்பட்டதன் காரணமாக அவை உருவாக்கப்பட்டன.
- தமிழ்நாடு அரசானது, இந்தப் பள்ளத்தாக்கினை ஒரு புவியியல் பாரம்பரியத் தளமாக அறிவித்து அதனைப் பாதுகாக்கத் திட்டமிட்டுள்ளது.
- இந்த செங்குத்தான பக்கவாட்டுக்களைக் கொண்ட ஒரு குறுகிய மற்றும் ஆழமான பள்ளத்தாக்கு ஆனது, சராசரியாக 7 மீட்டர் உயரம், 30 மீட்டர் அகலம் கொண்டது.

- இது சுமார் 23.03 முதல் 5.33 மில்லியன் ஆண்டுகளுக்கு முந்தையதாக மதிப்பிடப்பட்ட மியோசீன் சகாப்தத்தைச் சேர்ந்ததாகும்.
- இந்தப் பள்ளத்தாக்குகள் ஆனது எந்தவொரு கண்டத் தட்டு நடவடிக்கைகளினாலும் அல்லாமல் பல ஆண்டுகளாக நிகழ்ந்த மண் அரிப்பின் ஒட்டு மொத்த விளைவின் காரணமாக தோன்றியதாகும்.

## வேம்பூர் செம்மறி ஆடுகளின் நிலை

- தூத்துக்குடி மற்றும் விருதுநகர் மாவட்டங்கள் வேம்பூர் செம்மறி ஆடுகளை ('பொட்டு ஆடு') வாழ்விடமாகக் கொண்டுள்ளன.
- ஆங்காங்கே காணப்படுகின்ற செம்பழுப்பு நிறத் திட்டுகள் கொண்ட வெள்ளை நிற ரோமங்களையும், சிலவற்றில் ஒரு அரிதாக கருப்புத் திட்டுகளையும் கொண்ட அதன் தனித்துவமான ரோமத்திலிருந்து இந்த பெயர் பெறப்பட்டது.
- இந்தத் தனித்துவமான அடையாளங்கள் அவற்றை இந்தியாவில் உள்ள மற்ற செம்மறி இனங்களிலிருந்து வேறுபடுத்துகின்றன.
- இந்த வேம்பூர் செம்மறி ஆடுகள் ஆனது மெட்ராஸ் ரெட், மச்சேரி, செவ்வாடு மற்றும் கிலகரசல் ஆகியவற்றுடன் கூடிய தமிழ்நாட்டின் ஐந்து பூர்வீக ரோமம் கொண்ட செம்மறி ஆடு இனங்களில் ஒன்றாகும்.
- அதன் நடுத்தர அளவிலான தொங்கும் காதுகள், குறுகிய மெல்லிய வால்கள் மற்றும் உயரமான மெலிந்த உடல்கள் அவற்றை எளிதில் அடையாளம் காணக்கூடியதாக ஆக்குகின்றன.
- இந்த இனத்தின் மிகவும் இயற்கையான தகவமைப்பு மற்றும் வறண்ட பருவநிலைக்கு ஏற்றவாறு தகவமைதல் ஆகியவை மழைக்கால வேளாண் பகுதிகளுக்கு ஏற்றதாக அமைகிறது.
- இதன் தனித்துவத்தை அங்கீகரித்து, தேசிய விலங்கு மரபணு வள வாரியமானது 2007 ஆம் ஆண்டில் இந்த இனத்தை அதிகாரப்பூர்வமாகப் பதிவு செய்தது.




## பசுக்களுக்கான TANUVAS கிராண்ட் ஊட்டச்சத்து துணை நிறைவு

- தமிழ்நாடு நீர்ப்பாசன வேளாண்மை நவீனமயமாக்கல் திட்டம் (TNIAMP) ஆனது சுமார் 19,000க்கும் மேற்பட்ட விவசாயிகளுக்கு இந்த ஊட்டச்சத்து குறித்தத் துணை நிறைவு பொருட்களை இலவசமாக வழங்கியுள்ளது.
- TANUVAS கிராண்ட், கால்நடைகளிலிருந்து வெளியேறும் மீத்தேன் வெளியேற்றத்தைக்

குறைத்து அவற்றின் செரிமானத்தை மேம்படுத்த உதவுகிறது.

- இது பசுவின் வயிற்றில் நுண்ணுயிரிகள் வளர உதவுவதன் மூலம் ஒரு மாட்டுக்கு ஒரு நாளைக்கு 25-30 லிட்டர் மீத்தேன் வெளியேற்றத்தைக் குறைக்கிறது.
- இதன் விளைவாக, பால் உற்பத்தி மற்றும் சாணம் உற்பத்தியில் அதிகரிப்புப் பதிவாகி உள்ளது.




# தேசியச் செய்திகள்

## பஞ்சாயத்து அமைப்புகளின் முன்னேற்றக் குறியீடு (PAI)

- இந்த முதல் பதிப்புக் குறியீடானது, நீடித்த நிலையான மேம்பாட்டு இலக்குகளை (SDGs) அடைவதற்கான செயல்திறன் மற்றும் முன்னேற்றத்தின் அடிப்படையில் சுமார் 2.16 லட்சத்திற்கும் மேற்பட்டப் பஞ்சாயத்து அமைப்புகளை தரவரிசைப்படுத்துகிறது.
- PAI ஆனது, 9 கருத்துருக்களில் 566 தனித்துவமான தரவுப் புள்ளிகளைக் கொண்ட 435 தனித்துவமான உள்ளாட்சிக் குறிகாட்டிகளை (331 கட்டாயத் தேர்வு & 104 விருப்பத் தேர்வு) பயன்படுத்துகிறது.
- இந்தக் குறிகாட்டிகளின் அடிப்படையில் பஞ்சாயத்து அமைப்புகளுக்கு, 0 முதல் 100 என்ற மதிப்பெண்கள் வழங்கப்பட்டதோடு அவை மேலும் சாதனைப் படைத்தவை (90-100), முன்னணியில் இருப்பவை (75-90), செயல்திறன் மிக்கவை (60-75), இலட்சியம் மிக்கவை (40-60) மற்றும் தொடக்கநிலையில் உள்ளவை (40க்குக் கீழே) ஆகிய ஐந்து பிரிவுகளுள் ஒன்றில் தரவரிசைப் படுத்தப்பட்டன.
- இந்தியாவில் சுமார் 2.55 லட்சத்திற்கும் மேற்பட்டப் பஞ்சாயத்துகள் உள்ளன ஆனால் மாநிலங்கள் மற்றும் ஒன்றியப் பிரதேசங்களின் உரிய சரிபார்ப்புக்குப் பிறகு இந்த 29 மாநிலங்கள் /ஒன்றியப் பிரதேசங்களில் 2.16 லட்சம் கிராமப் பஞ்சாயத்துகளிலிருந்து மட்டுமே தரவு பெறப்பட்டது.
- 2.16 லட்சம் பஞ்சாயத்துகளில், 699 முன்னணிப் பஞ்சாயத்துகளாகவும், 77,298 செயல் திறன் மிக்கவையாகவும், 1,32,392 இலட்சியமிகு பஞ்சாயத்துகளாகவும், 5,896 தொடக்க நிலைப் பஞ்சாயத்துகளாகவும் தரவரிசைப்படுத்தப்பட்டுள்ளன.
- ஒரு முன்னணிப் பஞ்சாயத்துகளாக தரவரிசைப் படுத்தப்பட்ட 699 பஞ்சாயத்துகளில், 346 குஜராத்தைச் சேர்ந்தவை என்ற நிலையில் அதைத் தொடர்ந்து தெலுங்கானா (270)

மற்றும் திரிபுரா (42) ஆகியவை இடம் பெற்றுள்ளன.

- சாதனைப் படைத்தவை (90-100) பிரிவில் எந்த ஒரு பஞ்சாயத்தும் தரவரிசைப்படுத்தப் படவில்லை.

**Table: State wise number of Gram Panchayats in each Grade**

| Sl. No. | State/UT | Total No of GPs | No of GPs Submitted Data* | Grade | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | A+ | A | B | C | D |
| 1 | Andaman and Nicobar Islands | 70 | 70 | | | 14 | 55 | 1 |
| 2 | Andhra Pradesh | 13310 | 13310 | | 4 | 5372 | 7830 | 104 |
| 3 | Arunachal Pradesh | 2108 | 2108 | | | 63 | 1968 | 77 |
| 4 | Assam | 2194 | 2183 | | 1 | 1084 | 1097 | 1 |
| 5 | Bihar | 8053 | 8053 | | | 810 | 7148 | 95 |
| 6 | Chhattisgarh | 11643 | 11643 | | | 1239 | 8955 | 1449 |
| 7 | Gujarat | 14618 | 14618 | | 346 | 13781 | 491 | |
| 8 | Haryana | 6223 | 6223 | | | 339 | 5071 | 813 |
| 9 | Himachal Pradesh | 3468 | 3328 | | 1 | 673 | 2647 | 7 |
| 10 | Jammu & Kashmir | 4291 | 4291 | | 2 | 1520 | 2746 | 23 |
| 11 | Jharkhand | 4297 | 4281 | | | 375 | 3229 | 677 |
| 12 | Karnataka | 5921 | 5907 | | | 1644 | 4245 | 18 |
| 13 | Kerala | 941 | 941 | | 8 | 902 | 31 | |
| 14 | Ladakh | 193 | 193 | | | 82 | 111 | |
| 15 | Lakshadweep | 10 | 10 | | | 4 | 6 | |
| 16 | Madhya Pradesh | 23011 | 23011 | | | 7912 | 14942 | 157 |
| 17 | Maharashtra | 27849 | 27655 | | 8 | 12242 | 14944 | 461 |
| 18 | Manipur | 3222 | 1976 | | | 11 | 1741 | 224 |
| 19 | Mizoram | 834 | 834 | | | 86 | 731 | 17 |
| 20 | Odisha | 6794 | 6794 | | 1 | 2865 | 3882 | 46 |
| 21 | Punjab | 13239 | 10514 | | | 548 | 9784 | 182 |
| 22 | Rajasthan | 11207 | 10634 | | | 1580 | 8876 | 178 |
| 23 | Sikkim | 199 | 199 | | | 145 | 54 | |
| 24 | Tamil Nadu | 12525 | 12525 | | | 5557 | 6880 | 88 |
| 25 | Telangana | 12768 | 12768 | | 270 | 10099 | 2390 | 9 |
| 26 | Dadra & Nagar Haveli & Daman & Diu | 38 | 38 | | 12 | 8 | 18 | |
| 27 | Tripura | 1176 | 1176 | | 42 | 728 | 406 | |
| 28 | Uttar Pradesh | 57702 | 23207 | | 4 | 6593 | 15373 | 1237 |
| 29 | Uttarakhand | 7795 | 7795 | | | 1022 | 6741 | 32 |
| | **Total** | **255699** | **216285** | | **699** | **77298** | **132392** | **5896** |

No of GPs whose Data has been submitted on PAI portal after validation by State*

## "NITI NCAER மாநிலப் பொருளாதார மன்றம்" இணைய தளம்



- மத்திய நிதியமைச்சர் புது டெல்லியில் "NITI NCAER மாநிலப் பொருளாதார மன்றம்" என்ற இணைய தளத்தினைத் தொடங்கி வைத்துள்ளார்.
- இந்த தளமானது, தேசியப் பயன்பாட்டுப் பொருளாதார ஆராய்ச்சி சபையுடன் (NCAER)

இணைந்து நிதி ஆயோக் அமைப்பினால் உருவாக்கப்பட்டுள்ளது.

❖ இது சுமார் 30 ஆண்டுகளுக்கான (அதாவது 1990-91 முதல் 2022-23 வரையில்) சமூகம், பொருளாதாரம் மற்றும் நிதி அளவுருக்கள், ஆராய்ச்சி அறிக்கைகள், ஆவணங்கள் மற்றும் மாநில நிதி குறித்த நிபுணர் கருத்துகள் பற்றிய தரவுகளின் ஒரு மிக விரிவான களஞ்சியமாகும்.

# சர்வதேசச் செய்திகள்

## FAO அமைப்பின் புதிய முன்னெடுப்புகள் 2025




❖ உணவு மற்றும் வேளாண்மை அமைப்பு (FAO) ஆனது, வேளாண் சார்ந்த உணவுத் துறையில் உள்ள நெருக்கடி மிக்கச் சவால்களை எதிர்கொள்வதற்காக என பின்வரும் இரண்டு முக்கிய உலகளாவிய முன்னெடுப்புகளைத் தொடங்கியுள்ளது.
   - "நான்கு சிறந்தப் போக்குக்குகள்" முன்னெடுப்புகள் மற்றும்
   - "சமத்துவத்தை மேம்படுத்துவதற்கான உறுதிப்பாடு (CGE)" முன்னெடுப்பு.

❖ அவை கல்வி ஒருங்கிணைப்பை வலுப்படுத்துவதையும் உலகளவில் வேளாண் உணவு முறைகளில் நிலவும் பெரும் பாலின இடைவெளியைக் குறைப்பதையும் நோக்கமாகக் கொண்டுள்ளன.


❖ "நான்கு சிறந்த பிரிவுகள்" என்ற தொலைநோக்குத் திட்டத்தில் சிறந்த உற்பத்தி, சிறந்த ஊட்டச்சத்து, சிறந்த ஒரு சுற்றுச்சூழல் மற்றும் சிறந்த வாழ்க்கை முறை ஆகியவை அடங்கும்.

# சுற்றுச்சூழல் செய்திகள்

## கிண்டி தேசிய பூங்காவில் புல்வாய்களின் எண்ணிக்கை

❖ கணக்கெடுப்புத் தரவு ஆனது, 2020-21 ஆம் ஆண்டில் 61 ஆக இருந்த புல்வாய்களின் எண்ணிக்கையானது 2023-24 ஆம் ஆண்டில் 100 ஆக உயர்ந்துள்ளதைக் காட்டுகிறது.

- புள்ளிமான் எண்ணிக்கையும் அதிகரித்து வருவது, இந்தப் பூங்காவிற்குள் ஒரு பரந்த சூழலியல் மறுசீரமைப்பினைக் குறிக்கிறது.
- கிண்டி தேசியப் பூங்காவானது, சென்னை நகரின் மையத்தில் உள்ள சில பாதுகாக்கப் பட்ட பகுதிகளில் ஒன்றாகும் என்பதோடு மேலும் இது புள்ளிமான் மற்றும் புல்வாய் ஆகிய இரண்டு விலங்குகளுக்கும் இரண்டிற்கும் புகலிடமாக அமைகிறது.
- குறிப்பாக புல்வாய் இனங்கள் உயிர்வாழத் திறந்தவெளிப் புல்வெளிகளையே சார்ந்து உள்ளன.
- கிண்டி தேசியப் பூங்காவிற்குள் உள்ள நீண்டகாலமாக புறக்கணிக்கப்பட்ட ஒரு நிலப் பகுதி மீட்டெடுக்கப்பட உள்ளது.
- போலோ மைதானம் என்று அழைக்கப்படுகின்ற இப் பகுதியானது வெகு நாட்களாக ஊடுருவல் தாவர இனங்களால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளது.
- இந்தப் பூங்காவின் பாதுகாப்பு நிலையைப் பொருட்படுத்தாமல், இது புல்வாய்களின் முக்கியமான வாழ்விடமாக உள்ளது.





## ஆரஞ்சு நிற சதை கொண்ட சர்க்கரைவள்ளிக் கிழங்கு

- இந்திய வேளாண் ஆராய்ச்சி சபையின் மத்தியக் கிழங்கு பயிர்கள் ஆராய்ச்சி நிறுவனம் (ICAR-CTCRI) புதிய ஆரஞ்சு நிறச் சதை கொண்ட சர்க்கரை வள்ளிக் கிழங்கு வகையினை உருவாக்கியுள்ளது.
- SP-95/4 என பெயரிடப்பட்ட உயிரிச் செறிவூட்டப்பட்ட ஆரஞ்சு நிறச் சதை கொண்ட சர்க்கரை வள்ளிக் கிழங்கு வகையானது, ஒடிசா, மேற்கு வங்காளம், கர்நாடகா மற்றும் கேரளா உள்ளிட்ட பல மாநிலங்களில் மிக வெற்றிகரமாக இறுதிச் சோதனைகளுக்கு உட்படுத்தப் பட்டுள்ளது.
- இதில் சுமார் 100 கிராமிற்கு 8 மி.கி என்ற அளவில் பீட்டா கரோட்டின் இருப்பதால் இதில் இருக்கும் ஆரஞ்சு நிறத்திற்கு காரணமாகவும் வைட்டமின் Aக்கு ஒரு ஆதாரமாகவும் அது அமையும்.
- ஊட்டச்சத்துக் குறைபாட்டை எதிர்த்துப் போராடுவதற்கும் சமச்சீர் உணவை உறுதி செய்வதற்கும் பல்வேறு பழங்குடியினச் சமூகங்களிடையே உயிரிச் செறிவூட்டப்பட்ட கிழங்குகளை ஊக்குவிப்பதற்கான ஒரு பகுதியாக, 2023 ஆம் ஆண்டில் அட்டப்பாடியில் கிழங்குப் பயிர் அடிப்படையிலான 'வானவில் உணவு' என்ற ஒரு திட்டத்தினை CTCRI


அறிமுகப் படுத்தியது.

- 2024 ஆம் ஆண்டில், இது 'புனர்ஜீவனம்' திட்டத்தின் கீழ் அதிகரிக்கப்பட்டது.




# பிரபலமானவர்கள், விருதுகள், மற்றும் நிகழ்வுகள்

## அடிப்படை இயற்பியலில் திருப்புமுனை பரிசு 2025




- 2025 ஆம் ஆண்டு அடிப்படை இயற்பியலில் திருப்புமுனைப் பரிசு ஆனது, CERN என்ற அமைப்பில் நான்கு கூட்டுத் திட்டங்களில் சுமார் 13,508 இயற்பியலாளர்களுக்கு வழங்கப் பட்டுள்ளது.
- இது "அறிவியலின் ஆஸ்கார் விருதுகள்" என்று அழைக்கப்படுகிறது.
- வாழ்க்கை அறிவியல், கணிதம் மற்றும் அடிப்படை இயற்பியல் ஆகியவற்றில் தலா 3 மில்லியன் டாலர் மதிப்புள்ள ஆறு பரிசுகள் அறிவிக்கப்பட்டன.
- வாழ்க்கை அறிவியல் பிரிவில், எடை இழப்பு மருந்துகள், தண்டுவட மரப்பு நோய்


சிகிச்சை மற்றும் மரபணு மாற்றத் தொழில்நுட்பங்கள் ஆகிய பிரிவுகளைச் சேர்ந்த மூன்று அறிவியலாளர் குழுவிற்கு வழங்கப்பட்டது.

- அடிப்படை இயற்பியலில் திருப்புமுனை பரிசு ஆனது, CERN நிறுவனத்தில் உள்ள லார்ஜ் ஹாட்ரான் மோதலில் (LHC) நான்கு கூட்டு முன்னெடுப்புகளுக்கு வழங்கப்பட்டது.
- கணிதத்திற்கான திருப்புமுனைப் பரிசானது, "வடிவியல் லாங்லாண்ட்ஸ் என்ற கருது கோளினை நிரூபிப்பதில் அவரது மிகவும் முக்கியப் பங்கிற்காக" வேண்டி டென்னிஸ் கெய்ட்ஸ்கோரிக்கு வழங்கப்பட்டது.

# இதரச் செய்திகள்

## 2,000 ஆண்டுகள் பழமையான பெருங்கற்காலப் பொருட்கள்

- சமீபத்தில், கேரளாவின் பந்தடுக்காவில் உள்ள மணிமூலா கிராமத்தில் ஒரு குடவரை மற்றும் கலைப்பொருட்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன.
- அவை சுமார் 2,000 ஆண்டுகள் மிகவும் பழமையானவை மற்றும் பெருங்கற்காலத்தில் பயன்படுத்தப் பட்டிருக்கலாம் என்று கருதப்படுகிறது.
- அதன் அருகிலுள்ள 'பதயா கல்லு' எனப்படும் ஒரு கல் அமைப்பு ஆனது ஒரு பெருங் கற்கால நினைவுச் சின்னம் என்று நம்பப் படுகிறது.




## அந்தர் த்ரிஷ்டி மற்றும் உள்ளடக்கச் சேர்ப்பு செயலி




- புது டெல்லியில் உள்ள தேசிய பார்வைத் திறனற்றவர் சங்கத்துடன் (NAB) இணைந்து, பார்வைத் திறன் குறைபாடுள்ள நபர்களின் அதிகாரமளிப்புக்கான தேசிய நிறுவனம் (திவ்யாங்ஜன்), ஆனது 'அந்தர் த்ரிஷ்டி' - ஒரு மிகவும் தனித்துவமான உணர்வு சார் அடையாளம் காணும் இருள் அறையைத் துவக்கியுள்ளது.

- 'அந்தர் த்ரிஷ்டி' என்பது பார்வைத் திறன் குறைபாடுள்ள நபர்கள் எதிர்கொள்ளும் சவால்கள் குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்துவதையும் சமூகத்தினரை அது குறித்து உணர வைப்பதையும் நோக்கமாகக் கொண்ட பிரத்தியேகமாக வடிவமைக்கப்பட்ட உணர்வுப்பூர்வ அனுபவ இடமாகும்.
- NIEPVDஆனது 'உள்ளடக்கச் சேர்ப்பு' செயலியைச் செயல்படுத்த உள்ளது.
- இது வளர்ச்சிக் குறைபாடுகள் உள்ள குழந்தைகளை முன்கூட்டியே நன்கு அடையாளம் காணுதல், நடவடிக்கை மேற்கொள்ளுதல் மற்றும் கண்காணிப்பதற்காக அமர் சேவா சங்கத்தினால் உருவாக்கப்பட்ட ஒரு எண்ணிமத் தளமாகும்.



★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★